# <u>செயற்குழுக் கூட்டம் (27-11-2022)</u>

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உப தலைவரும், பொது செயலாளரும் மூன்று செயற்குழு உறுப்பினர்களும், பார்வையாளர்களாக இரண்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் அக்டோபர் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கூறியபடி அனைத்து மாவட்டங்கள், மற்றும் கிளைகளுக்கு மூண்றாண்டு வரவு செலவு கணக்குகள், உறுப்பினர் முதலியவற்றைக் கேட்டு கடிதங்கள் எழுதப்பட்டன. அவற்றில் கடலூர் மாவட்டத்தை தவிர மற்ற மாவட்டங்களிலிருந்து பதில் ஏதும் வரவில்லை. எனவே, அனைத்து மாவட்டங்கள்/ கிளை அலுவலர்களுக்கு மீண்டும் ஒரு முறை நினைவூட்டக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. எந்த ஒரு பதிலும் 31/12/2022-குள் கிடைக்கப் பெறாவிடில், சம்மந்தப்பட்ட கிளைகளை மூடி உத்திரவிட பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது.

3. மாவட்ட பொறுப்பாளர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண்களை நேர்மை நெறியில் வெளியிடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

4. எல்லா மாவட்டங்களிலும், கிளை அமைப்புகளிலும் உறுப்பினர்கள் அவரவர் சூழ்நிலைக்கேற்ப **STICKER COMPAIGN- துண்டு பிரசுரம்** அல்லது விளம்பர ஒட்டி, இயக்கத்தை முன்னிறுத்த வேண்டும்.. **டிசம்பர் 10ம் நாள் உலக மனித உரிமை தினமாக** அனைத்து மாவட்ட/ கிளைகளில் கொண்டாட வேண்டும். சென்னையில் காவல் துறையின் அனுமதி பெற்று நடத்தும் பொறுப்பை, திரு. நஃபீஸ் அஹமத் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

5. அலுவலகத் தொடர்புக்கு தனியாக ஒரு தொலைபேசி எண் தேவைப்படின், அதைப் பெற்றுக்கொள்ள பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது

6 **செந்தில் பாலாஜி வழக்கு**: தற்போது சென்னை உயர்நீதிமன்றம், நிலுவையில் உள்ள இரு குற்றவழக்குகளைத் தொடர இயலாத வண்ணம், இவ்வழக்குகளை மீண்டும் ஆரம்பம் முதல் புலனாய்வு செய்ய உத்திரவு பிறப்பித்துள்ளது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொதுச்செயலாளர் தெரிவித்ததால், இது போன்று எத்தனை வழக்குகள் வந்தாலும், தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி ஊழல்வாதிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் வரை சட்ட போராட்டம் நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க, பொதுச்செயலாளர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி முனைப்புடன் செயல்பட கேட்டுக்கொண்டு ஏக மனதாக தீர்மானிக்கப்படுகிறது.

7. நீதி மன்றத்தில் அதிகமாக வாய்தா வழங்குவதால் தீர்ப்புகள் தாமதமாகின்றன. தாமதமான நீதி சில சமயம் மறுக்கப்பட்ட நீதியாகிறது. இவற்றை நிவர்த்தி செய்ய வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். வாய்தாவுக்கு அபராதம் விதித்தோ, வழக்குறைஞர்களுக்கு தற்கால இடைநீக்கமோ செய்து சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்க பொதுச்செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானிக்கப்படுகிறது

8. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

ந சுப்ரமணியன்.
தலைவர்

V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்